பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**04 09 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) தமிழ்நாடு உள்ளிட்ட ஏழு மாநிலங்களில் உள்ள நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை **60-**லிருந்து, **62-**ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2) தமிழக மக்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு செங்கோட்டைன் தெரிவித்துள்ளார்.

3) பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்கும் திட்டத்தை மாநில அரசு கைவிட வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

4) தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anmol Kharb** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

தமிழ்நாடு உள்ளிட்ட ஏழு மாநிலங்களில் உள்ள நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை 60-லிருந்து, 62-ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதி திரு Joymalya Bagchi நீதிபதி திருமதி வி மோகனா ஆகியோர் கொண்ட அமர்வு, சட்டீஸ்கர், கர்நாடகா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, சிக்கிம், தமிழ்நாடு, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்கள், இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் விதிகளில் திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

60 வயதை நெருங்கும் நீதிபதிகள் தொடர்ந்து பணியாற்றும் வகையில், அவர்களின் உடல்நிலை மற்றும் செயல்பாடுகள் உள்ளனவா என்பதை அந்தந்த மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்றங்கள் ஆய்வு செய்து நீதிபதிகளை 62 வயது வரை பணியாற்ற அனுமதி அளிக்கலாம் என்றும் அந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாண்டு மார்ச் 31-ஆம் தேதியோ, அல்லது அதற்கு பிறகோ ஓய்வுபெற்ற நீதிபதிகள் இருப்பின், அவர்கள் மீண்டும் நீதித்துறையில் இரண்டாண்டுகாலம் பணியாற்ற அனுமதிக்கலாம் என்றும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுக்குப்பின் வேறு எந்த அரசு பதவியும் வகிக்கவில்லை எனில், மார்ச் 31-க்கு பிறகு ஓய்வுபெற்ற நீதிபதிகள் தங்களது விருப்பத்தை தெரிவிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

நீதிபதிகளின் வயதை 62-ஆக உயர்த்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இரண்டு வாரத்திற்குள் உச்சநீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் பற்றாக்குறையை கருத்தில்கொண்டு உச்சநீதிமன்றம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழக மக்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு துறைகளின் தேவைகள் மற்றும் மானியக் கோரிக்கைகளுக்கு ஏற்ப முதலமைச்சர் திரு விஜய் 110-ஆவது விதியின்கீழ் அறிவிப்புகளை வெளியிட்டு வருவதாகவும் கூறினார்.

மந்தை புறம்போக்கு, நீர்வழி புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு உள்ளிட்ட நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் பட்டா வழங்கக்கூடாது நிலங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும், இதுகுறித்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனறும் அவர் கூறினார்.

மாநிலத்தில் சட்டம் — ஒழுங்கை பாதுகாப்பது, போதைப்பொருள் தடுப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு மாநில கால்துறை மிகுந்த முக்கியத்தும் அளித்து செயல்பட்டு வருவதாகவும் திரு செங்கோட்டையன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

சென்னையை அடுத்த பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மூன்று கிலோமீட்டர் நீள சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்கும் திட்டத்தை மாநில அரசு கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தை தற்போதுள்ள தவெக அரசும் செயல்படுத்தி வருவதாக கூறியுள்ளார்.

இந்த திட்டத்தால், எஞ்சியுள்ள சதுப்பு நிலமும் அழியும் நிலை ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை இயன்றவரை அகற்றுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட 14 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte —வி ஆர் துரை - 46 Sec. )***

<<<<<<>>>>>>

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீர் இன்று மாலை முக்கொம்பு வந்தடைந்தது.

45 நாட்களுக்கு திறந்துவிடப்படும் தண்ணீர் சாகுபடிக்கு போதுமானதாக இல்லை என விவசாயி அயிலை சிவசூரியன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte — விவசாயி — 39 Sec. )*

<<<<<<>>>>>

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் செண்பகத் தோப்பு மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை அணைக்க வனத்துறையினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

மலைப்பகுதியில் உள்ள வன விலங்குகளுக்கோ, அரியவகை மூலிகைகளுக்கோ பாதிப்பு ஏற்படவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — கமலக்கண்ணன் - 57 Sec. )*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு இல்லம் தேடி பொருட்கள் வழங்கம் திட்டத்தின்கீழ், நாளை மற்றும் திங்கட்கிழமை விநியோகம் செய்யப்படும் என்று ஆட்சியர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

-----------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு மழையின் அளவு குறைந்துள்ளதால், விவசாயிகள் குறைந்த அளவிலான தண்ணீர் தேவைப்படும் மாற்றுப்பயிர்களை சாகுபடி செய்ய முன்வருமாறு ஆட்சியர் திருமதி. பத்மஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

---------------

கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை சார்பில், “தலைக்கவசம் அணிவோம் — உயிரைக் காப்போம், போதைப்பொருளை ஒழிப்போம்” என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது.

-----------------

தலைக்கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தி, மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் காவல்துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

-------------

தூத்துக்குடியில் உள்ள அருள்மிகு ராதா சமேத ஸ்ரீ ராதாகிருஷ்ணன் பெருமாள் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு வண்ணம் தீட்டுதல் ஓவிய போட்டி வினாடி - வினா போட்டிகள் நடைபெற்றன.

-------------------

தமிழ்நாடு கைம்பெண் மற்றும் ஆதரவற்றோர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாம் சென்னையில் வரும் 15ஆம் தேதி நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன் அறிவித்துள்ளார்.

------------------

சென்னையில் உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில், பயிற்சியை நிறைவு செய்த அதிகாரிகளின் தீரச் செயல் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anmol Kharb** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **21-14, 13-21, 21-17** என்ற செட் கணக்கில், தைவானின் **Ching Bing-** ஐ வென்றார்.

-----------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dev Javia** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **6-1, 6-2** என்ற செட் கணக்கில் ஸ்லோவேக்கியாவின் **Michal Krajci**-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Chirag Duhan**-னும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>